**இருபத்தியோராம் நூற்றாண்டிற்கான உயர்கல்விச் செயற்றிட்டம் - 2014**

---

இருபத்தியோராம் நூற்றாண்டிற்கான உயர்கல்விச் செயற்றிட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 4686 - எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 பீ(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்றிட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

செயற்றிட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் உயர் கல்வி அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சும் செயற்றிட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பெறுபவர்களுமையை உயர் கல்வி முறைமை, நியாயமான சமுதாயம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி தேவைகள் வரிசையில் தரமான உயர் கல்விச் சேவைகளை வழங்குவதற்கு நிறுவனங்கள் மற்றும் மனித வளங்கள் இயலளவு உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். உயர் கல்வித் துறை, கற்பித்தல் மற்றும் கற்றலின் பொருத்தப்பாடு மற்றும் தரத்தினை மேம்படுத்தல், மாற்று உயர் கல்வி மற்றும் மனித வளங்களின் விரிவாக்கல் மற்றும் வலுப்படுத்தல், கண்காணிப்பு, மதிப்பாய்வு, கற்கைகள் மற்றும் ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பால் என்பவற்றுக்கான நிறுவனரீதியான குறிக்கோள்கள் போன்ற நான்கு பிரதான செயற்திட்டம் கொண்டுள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,930 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியனானதுடன் மொத்தக் கிரயமும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 நவம்பர் 01 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறானவை. நிதிக்கூற்றுக்கள் பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்றன என்பதை நியாயபூர்வமாக உத்தரவாதம் செய்யும் வகையில் இலங்கை

கணக்காய்வு நியமங்களுக்கேற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள வெளிப்படுத்தல்களையும் தொகைகளையும் ஆதரிக்கவல்ல சான்றுகளைப் பரீட்சித்தல், நிதிசார் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது முகாமையினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் முக்கிய மதிப்பீடுகள், நிதிக்கூற்றுக்களது ஒட்டு மொத்தச் சமர்ப்பணம் மீதான மீளாய்வு என்பவற்றைக் கணக்காய்வு உள்ளடக்கியது. எனது உயர் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய, கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பன பெறப்பட்டன என்றும் அதற்கமைய, எனது அபிப்பிராயத்திற்கான போதியளவு அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்குத் தேவையெனக் கருதப்படும் முறைமைகளும் கட்டுப்பாடுகளும், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் கணக்கீட்டுப் பதிவேடுகள் போன்றவற்றையும் பரிசீலனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்ட முகாமை மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டினையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு ஏற்ப உள்ளகக் கட்டுப்பாட்டின் கண்ணோட்டத்தில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியவையாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்போரின் நிதியிலிருந்து செயற்திட்டம் மீதான செலவினம், செயற்திட்டத்தின் நிதிசார் மற்றும் பௌதீகரீதியான முன்னேற்றம், செயற்திட்டத்தின் செயற்பாடுகளிலிருந்து உருவாகும் சொத்துக்களும் பொறுப்புகளும், கடன் முதலியவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் போன்வற்றினைக் காட்டுவதற்குத் தொடர்ச்சியான அடிப்படையில் போதியளவு கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளதா என்பதும்

(ஈ) கடனின் கீழான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அறவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதி, பொருட்கள், உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்ட அமுல்படுத்தலுக்காக கடைப்பிடித்த வகைப்படுத்தலின் பிரகாரம் செலவினம் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 2.1. அபிப்பிராயம்

-----------------

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கேற்ப மீளளிப்பு விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ), மீது நியாயமான முறையில் நம்பிக்கை கொள்ளலாம் என்றும்,

(இ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

------------------------------------------------------------------------------------------

பின்வரும் அதவானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(அ) செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்கள் மற்றும் பொருளிருப்பு விடயங்களின் உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணப்பீட்டுச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டமானது ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்திருந்ததுடன் செயற்திட்ட பதவியணியின் 22 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட வீதங்களை விட உயர்வாக வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை ஏற்பாடுகள் அதிகாரச்சட்டத்திற்கு முரணாக செயற்திட்டத்தின் நான்கு ஆண்டுகள் சேவையை பூர்த்தியாக்கிய பின்னர் உடனே இராஜினாமா செய்திருந்த மூன்று ஊழியர்களிற்காக ரூபா 911,247 கூட்டு மொத்தத் தொகையான பணிக்கொடை படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 1/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையனி 3(iii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு ஒரு நாளிற்கு ஐ.அ.டொலர் 30 ஆன இடைநேர் படியை விஞ்சி மீளாய்வாண்டின் போது வெளிநாட்டிற்கு சென்றிருந்த ஆறு உத்தியோகத்தர்களிற்கு ஒரு நாளிற்கு ஐ.அ.டொலர் 50 ஆன இடைநேர் படிகள் செலுத்தப்பட்டிருந்தது என்று கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. மேலும், வெளிநாட்டிற்கு சென்றிருந்த 13 உத்தியோகத்தர்களிற்கு கூறப்பட்ட சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட படிகளைவிட அதிகமாக ரூபா 591,757 ஆன இணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதியத்தின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கியமான புள்ளிவிபரங்கள் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் |
| சர்வதேச அபிவிருத்திச் சங்கம் | 40 | 4,930.06 | 965 | 8.92 | 964.99 | 22.98 | 2,947.80 |
| | 40 | 4,930.06 | 965 | 8.92 | 964.99 | 22.98 | 2,947.80 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட காலப்பகுதியின் 80 சதவீதம் கடந்த பின்னர் ஒதுக்கப்பட்ட நிதிகளில் 60 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது என வெளிப்பட்டது. மிகுதி ஒரு ஆண்டு காலத்தின் போது ஐ.அ.டொலர் 17.02 மில்லியன் ஒதுக்கீட்டின் பயன்பாட்டின் சாத்தியத்தன்மை ஐயத்திற்கிடமாகக் காணப்படுகின்றன.

### 3.2. பௌதீக முன்னேற்றம்

உயர் கல்வித்துறையின் நிறுவனரீதியான விதிமுறை, கற்பித்தல் மற்றும் கற்றலின் தரம் மேம்படுத்தல், முற்போக்கான உயர் கல்வியின் விரிவாக்கலும் வலுப்படுத்தலும் மனித வள அபிவிருத்தி மற்றும் கண்காணிப்பு, மதிப்பாய்வு, கற்கைகள், ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பாடல் போன்ற நான்கு பிரதான பகுதிகளுடன் செயற்திட்டத்தின் கூறுகள் கொண்டிருந்தது.

மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட அத்தகைய நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றத்தில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உயர் கல்வித் துறைக்காக நிறுவனமயப்படுத்துகின்ற விதிமுறையின் கூறின் கீழ் மேற்கொள்ளவேண்டுமென இலங்கையில் உயர் கல்வித் துறையின் தேசிய தகைமை கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டு இறுதியளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. நாளதுவரையாக்கப்பட்ட கட்டமைப்பு வேலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆணைக்குவின் அங்கீகாரம் 2014 திசெம்பர் 31 இல் வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தலைமைத்துவம் மற்றும் தர அபிவிருத்தி நிலையத்தின் நிர்மாண வேலைகளை 2015 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அவற்றின் மீது முன்னேற்றம் எதுவும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பட்டப்பின்படிப்பு கற்கைகளை பூர்த்தியாக்குவதற்கு செயற்திட்டத்தால் நிதி ஆதரவு வழங்கப்பட்டிருந்த 221 நபர்களில் 78 நபர்கள் 2014 திசெம்பர் 31 அளவில் அவர்களுடைய கற்கையை பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 21 நபர்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவர்களுடைய கற்கையை பூர்த்திசெய்திருக்கவில்லை.

(ஈ) செயற்திட்ட கீழ் செய்யப்பட்ட பல்கலைக்கழக அபிவிருத்தி மானியம் உயர் கல்வி தொடர்பில் அவர்களுடைய பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு சகல பல்கலைக்கழகங்களுக்கும் உதவிபுரிகின்றன. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவடைந்த 04 ஆண்டுகளிற்காக செய்யப்பட்ட ஏற்பாடுகளில் 07 பல்கலைக்கழகங்கள் அவர்களுடைய பொருளாதாரம் தொடர்பான இலக்குகளை எய்நாதிருந்தன.

(உ) பல்கலைக்கழகங்களின் வெளிவாரி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் அபிவிருத்திக்காக 2014 திசெம்பர் 31 வரை வழங்கப்பட்ட ஒதுக்கீட்டில் 15 சதவீதம் முதல் 49 சதவீதம் வரையான வீச்சிலான ஒதுக்கீடுகள் 08 பல்கலைக்கழகங்காளால் மாத்திரம் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தில் உயர் கற்கைகளிற்கான தேசிய நிலையத்தின் சிரேஷ்ட கணக்காளர் செயற்திட்டத்தின் பதில் நிதி முகாமையாளர் மற்றும் நிதி ஆலோசனையாளராக வேலைசெய்திருந்ததுடன் அவருடைய நிரந்தர பதவிக்கு மேலதிகமாக 2014 ஆம் ஆண்டிற்காக படியாக ரூபா 892,667 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. ரூபா 75,000 ஆன மாதாந்த படியில் செயற்திட்டத்தால் இன்னொரு நிதி ஆலோசனையாளரும் நியமிக்கப்பட்டிருந்தார். மேற்குறிப்பிட்ட சகல மூன்று பதவிகளிற்காகவும் ஒரே கடமைப்பட்டியல்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டவாறு ரூபா 75,000 மாதாந்த வேதனத்தில் பிரதி கொள்வனவு முகாமையாளர் பதவிக்காக நபரொருவரை சேர்ப்பதற்குப் பதிலாக முறையே ரூபா 150,000 மற்றும் ரூபா 80,000 மாதாந்த வேதனத்தில் இரண்டு கொள்வனவு ஆலோசனையாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) செயற்திட்டத்திற்கான புதிய பணிப்பாளர் 2014 ஒக்தோபர் மாதத்திலிருந்து ரூபா 110,000 ஆன மாதாந்த வேதனத்தில் நியமிக்கப்பட்டிருந்த அதேநேரம், முன்னாள் செயற்திட்டப் பணிப்பாளர் ரூபா 60,000 மாதாந்த கட்டணத்தில் 2014 ஒக்தேபர் முதல் 2015 மார்ச் வரையான காலத்திற்காக ஆலோசனையாளராக செயற்பட்டுள்ளார். செயற்திட்ட நடைமுறைகளிற்கான கல்விக்கு புதிய செயற்திட்ட பணிப்பாளருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 100,000 மேலதிக மொத்தமான படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்த அடிப்படையில் வரிசை அமைச்சின் கீழான வேறு நிறுவனங்களின் 12 உத்தியோகத்தர்களிற்காக ரூபா 3,464,100 கூட்டு மொத்தத் தொகையான கட்டணங்கள் செலுத்தப்பட்ட போதிலும் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்புபட்ட அத்தகைய வேலைகளை நிரூபிப்பதற்கு கணக்காய்விற்கு எவ்வித ஆவணச் சான்றுகளும் கிடைத்திருக்கவில்லை.

(உ) வாடகை அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்ட இரண்டு வாகனங்களிற்காக மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் ரூபா 1,440,000 கூட்டு மொத்தத் தொகையான வாடகைக் கட்டணங்கள் செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய வாகனம் செயற்திட்ட நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்பட்டது என நிரூபிப்பதற்கு ஆவணரீதியான சான்றுகள் கிடைத்திருக்கவில்லை.

(ஊ) செயற்திட்டமானது பல்கலைக்கழக சமூகம் மற்றும் உயர் கல்வித் துறையின் இயலளவை கட்டியொழுப்புவதின் நிதி மற்றும் நிதியல்லா நலன்கள் வழங்குகின்ற நோக்கத்திற்காக செய்யப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி தற்காலிக அடிப்படையில் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவுக்கு இணைக்கப்பட்ட ஆலோசனையாளரின் வெளிநாட்டு சுற்றுலாக்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,859,475 ஆன தொகை செலவழித்திருந்தது.

(எ) செயற்திட்டமானது முன்னாள் செயற்திட்ட பணிப்பாளர் பங்குபற்றுவதற்கு பட்டியல்படுத்தப்பட்ட 2014 ஆண்டின் உலக உச்சிமாநாட்டிற்கான பதிவிடல், நுழைவுச்சீட்டு மற்றும் விமான பயணச்சீட்டு போன்றவற்றிற்காக ரூபா 432,722 செலவழித்திருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், முன்னாள் செயற்திட்டப் பணிப்பாளர் உலக உச்சி மாநாட்டில் பங்குபற்றியிருக்கவில்லை.

### 3.4 விதிவிலக்கான விடயங்கள்

உரித்துடைய படிகளை விஞ்சி ரூபா 2,037,965 கூட்டு மொத்தத் தொகையான வாகனப் பயன்பாட்டிற்கான படிகள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுடன் நேரடியான தொடர்புபட்டிருக்காத பல்கலைக்கழகங்களின் மாணவர்களுடைய அலுவல்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளிற்காக ஈடுபடுத்தப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 3.5 குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

செயற்திட்டமானது இலங்கை தகமைக் கட்டமைப்பிற்காக 2014 யூன் மாதத்தில் ரூபா 1,534,999 ஆன கிரயத்தில் 5000 புத்தகங்களை அச்சிடப்பட்டிருந்தது. மற்றும் அந்த புத்தகங்களின் 4,750 பிரதிகள் விநியோகிக்கப்படாமல் 2015 ஏப்ரல் 30 இல் செயற்திட்ட வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது என வெளிப்பட்டது.